மீன்பிடிக்கும் வலைகளுக்கு நூல் விநியோகம்.

*202 வினா.—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வேதாரண்யம் ஆறு காட்டுத்துறையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வலைகளுக்காக நமது அரசு வலை நூல் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், வழங்கியுள்ள வலை நூல்கள் கடனாகவா இலவசமாகவா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) இத் தீ விபத்திற்குள்ளான 117 மீனவர்களுக்கு ஏற்பட்ட விரயத்தில் $\frac{1}{4}$ பங்கு வரை நைலான் நூலாகவும் பருத்தி நூலாகவும் பரிகாரமளிக்கப்பட்டது. இதில் பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் கருதப்பட்டது.

Sub-Registrar's Office for Thattarmadam

*** 203 *Q*.—THIRU T. MARTIN :** Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Sub-Registrar's Office at Thattarmadam village in Sattankulam Panchayat Union Council area in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பகுதியிலே குமட்டிக்கோட்டை, நடுவக்குறிச்சி, தட்டார்மடம், என்ற இடங்களிலே பத்திரப் பதிவு அலுவலகம் இல்லாத காரணத்தினாலே, நான்குனேரி பகுதியிலே உள்ள திசையன்விளைக்கு வந்து பத்திரப் பதிவு செய்யவேண்டியிருக்கின்ற காரணத்தாலே தட்டார்மடத்திலே பத்திரப்பதிவு அலுவலகத்தை ஏற்படுத்த முடியாது என்று சொல்லிவிட்ட காரணத்தாலே திசையன்விளையிலிருந்து சப் ரிஜிஸ்தாரை வாரத்திற்கொருமுறை தட்டார்மடத்திற்கு வந்து பத்திரங்களைப் பதிவு செய்து கொடுக்கக்கூடிய வசதிகளைச் செய்யவேண்டுமென்று அந்தப் பகுதியிலுள்ள மக்களிடமிருந்து விண்ணப்பம் வந்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்லிவிட்ட பிறகு மீண்டும் அதையே கேட்பது . . .

திரு. டி. மார்டின் : விண்ணப்பம் வந்ததா என்று கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டும் ஒன்றுதான்.

பத்திரப் பதிவுத் துறையின் வருமானம்.

*204 வினா.—**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

தமிழகப் பத்திரப் பதிவுத் துறையில் கோப்பு முறை அமுலுக்கு வந்த பின் முன்பைவிட வருமானம் அதிகரித்துள்ளதா அல்லது குறைந்து உள்ளதா, எவ்வளவு ?

மாண்மிகு திரு. செ. மாதவன் : ரூ. 20,59,544 அதிகரித்துள்ளது.